# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,633 — 1959 ජනවාරි 2 වැනි සිකුරාදා — 2.1.1959

11,633 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1950 ம் ஆண்டின் 25 ம் இலக்க உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### நிறை முறையில் அரிசி விற்பனை

1952 ம் ஆண்டின் உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் III ம் பாகத்தின் 4 (1) ம் பிரிவின் " இ " தலையங்கத்தின் கீழ் 1959 ம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ந் திகதி தொடக்கம் இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள வகுப்பைச்சேர்ந்த அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்தை உடையவரும் கொழும்பு, காலி, யாழ்ப்பாணம், கேகாலை மன்னார், அம்பாந்தோட்டை ஆகிய பரிபாலன மாவட்டங்களில் ஒன்றில் வசிப்பவருமான ஒருவருக்கு இருத்தல் முறையில் விற்கப்படும் அல்லது வழங்கப்படும் அவ்வகுப்புக்கான வாராந்தரப் பங்கீட்டரிசி அட்டவணையின் II ம் பத்தியில் அவ்வொருவருக்கு நேராகக் காணப்படும் தொகையே என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

அட்டவணை

| பத்தி I<br>வகுப்பு | பத்தி II<br>அரிசி<br>(இருத்தல்கள்) |
|---|---|
| குழந்தை .. .. .. | 4 |
| பிள்ளை .. .. .. | 4 |
| சாதாரணம் .. .. .. | 4 |
| வேலையாள் .. .. .. | 4 |

குறிப்பு.—ஒரு கொத்து அரிசி இரண்டு இருத்தலுக்குச் சமமானது. இவ்விகிதப்படி பாவனையாளர் கூப்பன் கொடுப்பதன் பேரில் ஒரு வாரத்திற்கு ஒரு அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்திற்கு இரண்டு கொத்திற்குப் பதில் நாலு இருத்தல் அரிசி பெறுவர்.

கே. எம். டீ. ஜயநெத்தி,
உணவுக் கட்டுப்பாட்டதிகாரியும் உணவு அதிகாரியும்.

கொழும்பு,
1958 ம் ஆண்டு டிசெம்பர்மீ 30 ந் உ.

---

### 4 B ம் மாதிரிப்பத்திரம்

### 1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

### சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத்தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிவதிகாரி விக்டர் யோசேப்பு அரேல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

வீ. யோ. அ. குணசேகரா,
இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிவதிகாரி.

கொழும்பு,
1958 ம் ஆண்டு மார்கழிமீ 30 ந் உ.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவு செய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இன முறையும் |
|---|---|---|
| J 5—2.7.50 .. | மொறிஸ் ஆறுமுகம், கௌறவில்லைத் தோட்டம், அப்கொட் | நோனு பந்துசாமா (மனைவி), கிறித்தோபர் விசயேந்திரன் (மகன்) |
| J 433—11.2.51 .. | செபத்தியான் மைக்கேல், கிளன்கறிவ் தோட்டம், நோட்டன் பிறிட்ச் | சின்ன மதலையம்மாள் (மனைவி), அந்தோனிமுத்து (மகன்), ஆரோக்கியமேரி (மகள்) |
| J 904—16.1.51 .. | மாணிக்கம் நல்லம்மா, வளமலைப் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்க்கெலியா | மருதாயி (மகள்), ஆறுமுகம் (மகன்), மாரியாயி (மகள்) |
| J 963—16.1.51 .. | கறுப்பண்ணன் பெரியண்ணன், வளமலைப் பிரிவு, லக்சபானைக் கூட்டம் மஸ்கெலியா | சின்னப்பிள்ளை (மனைவி) |
| J 965—16.1.51 .. | நாகன் இராசு, வளமலைப் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்கெலியா | பாப்பாத்தி (மனைவி), மாரியாயி அல்லது முனியம்மாள் (மகள்), தங்கம்மா (மகள்), தனலெட்சுமி (மகள்), கணேசன் (மகன்) |
| J 967—16.1.51 .. | நாக்கப்பன் நாராயணன், வளமலைப் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்க்கெலியா | காமாட்சி (மனைவி), திருப்பதி (மகன்), பொம்மக்கா (மகள்) |
| J 969—16.1.51 .. | அரப்புலி வீரப்பன், வளமலைப் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்கெலியா | ஆயாயி (மனைவி), முருகாயி (மகள்), பெரியக்கா (மகள்), சங்கப்பிள்ளை (மகன்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இன முறையும் |
|---|---|---|---|
| J 1015—16.1.51 | .. | சிதம்பரம் இரெங்கப்பன், வளமலேப் பிரிவு, லக்சபானேக் கூட்டம், மஸ்கெலியா | வீரம்மா (மனேவி) |
| J 1536—29.5.51 | .. | முனிசாமி சிவானு, யு. டி. கே. வெள்ளேஓயாத் தோட்டம், அற்றன் | பழனியம்மா (மனேவி), சிந்தாமணி (மகள்), அன்னசுவாமி (மகன்), அமராவதி (மகள்) |
| J 1750—20.5.51 | .. | சின்னக்கறுப்பன் வேலு, எமலினுப் பிரிவு, பிறன்ஸ்விக் கூட்டம், மஸ்கெலியா | மீனம்மா (மனேவி) |
| J 1794—18.6.51 | .. | அழகப்பன் சிவபெருமாள், பிறன்ஸ்விக் கூட்டம், மஸ்க் கெலியா | செல்லம்மா (மனேவி), வெள்ளேயம்மா (மகள்) |
| J 1803—20.5.51 | .. | ஆறுமுகம் வீரன், எமலினுப் பிரிவு, பிறண்ஸ்விக் கூட்டம், மஸ்கெலியா | செல்லாயி (மனேவி), சிவனுயி (மகள்), மாரியாயி அல்லது மாடம்மா (மகள்) |
| J 1821—20.5.51 | .. | தாண்டவன் முருகன் கைம்பெண் அங்கம்மா, டன்னேற்றுர் பிரிவு, பிறன்ஸ்விக் கூட்டம், மஸ்கெலியா, | வயிரன் அல்லது முத்துச்சாமி (மகன்), குள்ளன் அல்லது முத்துச்சாமி (மகன்), கோபால் (மகன்), கிருஷ்ணன் (மகன்), பார்வதி அலலது கனகவல்லி (மகள்), நாரா யணசாமி (மகன்) |
| J 1912—17.6.51 | .. | வெள்ளேயன் முத்துக்கறுப்பன், கிளன்ரில்ற் பிரிவு, கிளன் ரில்ற் கூட்டம், மஸ்க்கெலியா | சிட்டு (மனேவி), காளியம்மா (மகள்), கந்தையா (மகன்), தெய்வானே (மகள்) |
| J 1945—17.6.51 | .. | அரப்புலி முத்துச்சாமி, கிளன்ரில்ற் பிரிவு, கிளன்ரில்ற் கூட்டம், மஸ்கெலியா | வேலாயி (மனேவி), கந்தன் அல்லது முத்துசாமி (மகன்) |
| J 2181—18.6.51 | .. | திருமலே கிட்ணன், ஹுக்கோம்பேத் தோட்டம், மஸ்க்கெலியா | ஆராயி (மனேவி), இராமர் அல்லது பொன்ராமன் (மகன்), முத்தையா அல்லது சதாசிவம் (மகன்), மீனுள் அல்லது உண்ணுமலே (மகள்), காளிமுத்து அல்லது இராமசாமி (மகன்), இராமக்கிருஷ்ணன் (மகன்) |
| J 2225—17.6.51 | .. | சின்னத்தம்பி பெரியசாமி, கிளன்ரில்ற் பிரிவு, கிளன்ரில்ற் கூட்டம், மஸ்க்கெலியா | முத்தம்மா (மனேவி), அம்சவல்லி (மகள்), முனியாண்டி (மகன்), செல்லம்மா (மகள்), மாரியம்மா அல்லது மாரியாயி (மகள்) |
| J 2245—17.6.51 | .. | இராமசாமி பேச்சிமுத்து, கிளன்ரில்ற் பிரிவு, கிளன்ரில்ற் கூட்டம், மஸ்கெலியா | அம்மாள் (மனேவி), காத்தாயி (மகள்), சின்னம்மா (மகள்) ஆச்சிக்கண்ணு (மகள்), சந்திரபோஸ் (மகன்), கமலம் (மகள்); கணேசன் (மகன்) |
| J 2262—17.6.51 | .. | பெரியண்ணன், பெருமாள், கிளன்ரில்ற் பிரிவு, கிளன்ரில்ற் கூட்டம், மஸ்கேலியா | பாப்பாத்தி (மனேவி), தனபாக்கியம் (மகள்), சரசுவதி (மகள்), வெய்வமணி (மகள்), இலெட்சுமி (மகள்), [illegible]ாட்டிச்சி (மகள்) |

## விளம்பரம்

1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 14 ந் திகதி புதன்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக விருப்பதனே முன்னிட்டு, 1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 16 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படவேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல் களும் 1959 ம் ஆண்டு தை (ஜனுவரி) மாதம் 12 ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 4 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்து சேரவேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

பேர்ஞர்ட் த சில்வா,
அரசாங்க அச்சகத் தலேவர்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1958 ம் ஞூ மார்கழி (டிசெம்பர்) மீ 27 ந் உ.

**1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய திருத்தப்பட்ட கிரய விகிதங்கள்**

# " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கசெற்) "

**வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன், **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. கிழமை நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 4.30 மணி வரையும், சனிக்கிழமைகளில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. கிழமை நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும், சனிக்கிழமைகளில் நண்பகல் 12 மணிக்கும் பணங் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. " நகலை " **கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக " ரைப் " அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப் பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப் படமாட்டா.

10. **1955 ம் ஆண்டு (ஜனவரி) தை மாதம் 1 ந் திகதி** தொடக்கம் அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | .. | 10 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 5 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் | .. | 60 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 120 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **வெளியாவதற்கு மூன்று வேலை நாட்களுக்கு முன் பி. ப. 4 மணிக்குள் (சாதாரணமாக செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணி)** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

13. **ஒரு வருடத்திற்கு அல்லது அரை வருடத்திற்குரிய சந்தா, முன் பணமாக கொழும்பு, அரசாங்கப் பிரசுர நிலைய அதிபரால் பதிவு செய்யப்படும்.**

14. சந்தா விகிதங்கள்—

| | | ரூ. ச. | |
|---|---|---|---|
| ஒரு வருட சாந்தா | .. | 15 0 | .. ஒவ்வொரு பகுதிக்கும் |
| | | 7 0 | .. ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவுக்கும் |
| ஒவ்வொரு பகுதியினதும் தனிப் பிரதி | .. | 0 25 | |
| | | 0 31 | .. தபாற் செலவுடன் |
| ஓராம் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 10 | |
| | | 0 14 | .. தபாற் செலவுடன் |

15. கைவசமுள்ள பழைய பிரதிகளுக்கு இரட்டிப்புப் பணம் செலுத்தப்படல் வேண்டும். **கொழும்பு, அரசாங்க பிரசுர நிலைய அதிபர் அவர்கட்கு** விண்ணப்பிக்கவேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.